THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the railway crossing at Pachakuppam has become a bottleneck to vehicular traffic not only from our State but from Karnataka, Maharashtra, Andhra, etc., as all of them have to pass through that level crossing. So, all vehicles stop there for furlongs and furlongs and the level crossing is closed for long time as many trains have to pass and a lot of time is wasted causing great inconvenience. This is the second time I am putting this question. I therefore request the Hon. Minister whether he would give top priority for this and take up this work immediately. Will he do that?

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, only to relieve the traffic bottleneck there, Government have taken steps to lay an over-bridge there. The alignment is being investigated. As soon as the alignment is finalised, work will be taken up.

### குடனாற்றுப் பாலத்தை அகலப்படுத்தல்

*843 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் வட்டம், ஆத்தூர் தொகுதியில் செம்பட்டியிலிருந்து பலகனூத்து போகும்வழியில் உள்ள குடனாற்றுமேல் உள்ள பாலத்தை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: ஆத்தூர் தொகுதியில் செம்பட்டியிலிருந்து பலகனூத்து போகும்வழியில் உள்ள குடனாற்றுப் பாலம் மிக மோசமான நிலைமையில் இருக்கிறது என்று மதுரை மேற்கு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கூறப்பட்டு, அதிகாரிகள் மதிப்பீடு செய்து தீர்மானம் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்தப் பாலத்தைக் கட்ட ஆவனச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அந்தப் பாலத்திற்கு 6 லட்சம் ரூபாய் செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. நிதிநிலை சீர்பட்ட பிறகு இதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.